இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 02-04-2025

# அமித்ஷா சட்டத்துக்கு எதிராக அமித்ஷா சட்டம்!

குடியேற்றம், வெளிநாட்டவர் மசோதாவை மக்களவையில் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. இந்தச் சட்டம், அவர் முன்னர் கொண்டு வந்த குடியுரிமைச் சட்டத்துக்கே எதிரானது என்பதுதான் உண்மை. அமித்ஷா சட்டத்துக்கு எதிராக அமித்ஷாவே சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறார். இந்த முரண்பாடுகளை மொத்தமாகக் கொண்டதுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசு.

கடந்த மார்ச் 27 ஆம் தேதி அன்று மக்களவையில் குடியேற்றம், வெளிநாட்டவர் மசோதா ஒன்று நிறைவேறி இருக்கிறது. வெளிநாட்டில் இருந்து இந்தியா வருபவர்களை முறைப்படுத்துவதற்கான சட்டமாக இது கொண்டு வரப்படுகிறது. குடியேற்றம், வெளிநாட்டவர் இந்தியா வருகை, தங்குதல், சொந்த நாட்டுக்குத் திரும்புதல் ஆகியவற்றை முறைப்படுத்துதல் தொடர்பான முன்வரைவு இது. மார்ச் 11 ஆம் தேதி இது மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. தி.மு.க. உள்ளிட்ட எதிர்க் கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு இடையில் இதனை நிறைவேற்றி விட்டார்கள்.

**இந்த சட்டத்தின்படி, வெளிநாட்டவர் வருகை, தங்குதல், புறப்பாடு ஆகிய அனைத்தும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு விட்டது. 'இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள 90 ஆயிரம் இலங்கைத் தமிழரை இது பாதிக்கும்' என்று தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி குற்றம் சாட்டினார். 'நியாயமான காரணங்களுக்காக சொந்த நாட்டையும் உடைமைகளையும் விட்டு தப்பிவந்து தஞ்சம் கோரும் மக்களைப் பற்றி இந்தச் சட்டம் கவலைப்படவில்லை' என்பதையும் உணர்த்தினார். "ஆளும் கட்சியின் கொள்கைகளுடன் உடன்படாத வெளிநாட்டவர் வருகையைத் தடுக்க இதனைக் கொண்டு வந்துள்ளீர்கள்" என்று காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியது.**

"வர்த்தகம், கல்வி, முதலீடு நோக்கத்துக்காக இந்தியாவுக்கு வருகை தரும் வெளிநாட்டவர் எப்போதும் வரவேற்கப்படுவர். ஆனால் இந்திய நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா, மக்களவையில் பேசி இருக்கிறார். "இந்தியாவுக்கு வருகை தரும் ஒவ்வொரு வெளிநாட்டவரின் தகவலைப் பெறுவதையும், அத்தகவல் முழுமையாகக் கண்காணிக்கப்படுவதையும், இந்த மசோதா உறுதி செய்யும். குடியேற்றம் என்பது நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்வேறு பிரச்சினைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது" என்று பேசினார் உள்துறை அமைச்சர் அமித்ஷா.

'இந்தியா என்பது எவர் வேண்டுமானாலும் வந்து, இலவசமாகத் தங்கும் தர்ம சாலை அல்ல' என்று கொந்தளித்துப் பேசி இருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா.

இதே அமித்ஷா அவர்கள், குடியுரிமைச் சட்டம் என்ற கருணைமிக்க சட்டத்தை வடித்துக் கொடுத்தாரே? அதன் நோக்கம் என்ன? 'இந்தியா என்பது தர்மசாலைதான், வாங்கோ, வந்து தங்கிக்கோங்கோ' என்பது தானே அந்த சட்டத்தின் நோக்கம்?

**இசுலாமிய மக்களையும், இலங்கைத் தமிழர்களையும் நீக்கி விட்டு கருணை பொங்க ஒரு சட்டத்தை அன்றைக்கு நிறைவேற்றினீர்களே? அப்போது, 'பாதிக்கப்பட்ட மக்களுக்கான நாடு இந்தியா' என்று சொல்லவில்லையா?**

ஒன்றிய அரசின் குடியுரிமைச் சட்டமானது இந்தியாவுக்குள் யார் எல்லாம் வரலாம், வந்தால் யாருக்கெல்லாம் குடியுரிமை வழங்கப்படும் என்று வரையறுத்தது. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசத்தைச் சேர்ந்தவர்கள் வரலாம் என்றும், அந்த நாட்டைச் சேர்ந்த இசுலாமியர்கள் நீங்கலாக மற்ற மதத்தைச் சேர்ந்தவர்கள் வரலாம் என்றும் சொன்னார்கள்.

**பாகிஸ்தானில் இருந்து, வங்க தேசத்தில் இருந்து, ஆப்கானிஸ்தானத்தில் இருந்து இசுலாமியர் நீங்கலான மற்ற மதத்தவர்கள் வரலாம் என்றால் அண்டை நாடான இலங்கையைச் சேர்ந்தவர்கள் வரலாமா? என்றால் வரக்கூடாது என்பதைத் தடை செய்த சட்டம் அது. இலங்கைத் தமிழர்க்கு மாபெரும் துரோகம் இழைத்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு.**

அண்டை நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு குடியுரிமை வழங்குகிறோம் என்றால் இலங்கையைச் சேர்த்திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை.

மற்ற அண்டை நாட்டைச் சேர்ந்த இந்துக்கள் வரலாம் என்றால் இலங்கையில் இருக்கும் தமிழர்களை இந்துக்களாக பா.ஜ.க. அரசு அங்கீகரிக்கவில்லை.

**பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கம் ஆகிய நாடுகளை மட்டும் குறிப்பிட்டு இச்சட்டம் நிறைவேற்றப்பட்டு இருப்பதன் நோக்கம் இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் நாட்டில் உள்நாட்டு குழப்பம் ஏற்படுத்துவதற்குத்தான். முஸ்லீம்களால் தொல்லைக்குள்ளாக்கப்படும் மற்ற மதத்தவரைக் காப்பாற்றுவது இச்சட்டத்தின் நோக்கம் என்றால், பவுத்த சிங்களவர்களால் தமிழர்கள் கொல்லப்படுவது பற்றி பா.ஜ.க. அரசு கவலைப்படவில்லை.**

இப்படி பல்வேறு சதிகளின் அடிப்படையில் குடியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றினார்கள்.

ஈழத்தில் இருப்பவர்கள் இனத்தால் தமிழர்களாக இருந்தாலும் அவர்களது சமய நம்பிக்கை இந்து - சைவம் சார்ந்ததுதான். அவர்களை திட்டமிட்டு புறக்கணித்திருப்பது இந்துக்களாகவே இருந்தாலும் 'இந்து தமிழர்கள்' வேண்டாம் என்ற வஞ்சகம்தான்.

**பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இஸ்லாமியர் நீங்கலாக யாரும் வரலாம் என்று சொல்வதற்கு ஒரு சட்டம். 'இந்தியா தர்ம சாலை அல்ல' என்று சொல்வதற்கு இன்னொரு சட்டம். அமித்ஷாவுக்குத்தான் எத்தனை முகங்கள்?**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.4.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நா.இளையராஜா சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

### மக்கள் நலத் திட்டங்கள் எல்லா தொகுதிகளிலும்

# கட்சி பாகுபாடின்றி நிறைவேற்றப்படுகிறது!

## பேரவையில் எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதில்!

**சென்னை, ஏப். 2 -**

**"மக்கள் நலத் திட்டங்கள் கட்சிப் பாகுபாடின்றி நிறைவேற்றப்படுகிறது" என்று சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போது தெரிவித்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.4.2025) சட்டமன்றப் பேரவையில், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் நீண்ட நாட்களாகத் தீர்க்கப்படாமல் உள்ள பத்து முக்கிய கோரிக்கைகளை முன்னுரிமைப்படுத்தி பரிந்துரைப் பட்டியல் அளித்து நிறைவேற்றப் படும் திட்டம் குறித்து எதிர்க்கட்சி தலைவர் அவர்களின் கேள்விக்கு பதிலளித்து உரையாற்றினார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும் 10 பணிகளை முன்னிலைப்படுத்தி வழங்கி, அதை நிறைவேற்றிடும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து இங்கு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். இருந்தாலும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இத்திட்டத்தில் மாற்றுப்பணியை தந்தாலும் அதுவும் சாத்தியமில்லை என்று தெரிய வருகிறது என்று சொல்லியிருக்கிறார். அது உண்மை தான், அதை நான் மறுக்கவில்லை.

**பட்டியல் தராத அ.தி.மு.க. உறுப்பினர்!**

இந்த திட்டத்தை பொறுத்த வரை, இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நாங்கள் ஆய்வு செய்து வருகிறோம். முதலமைச்சராகிய நானே அதை தலைமை தாங்கி ஆய்வு செய்து கொண்டிருக்கிறேன். எனவே கட்சிப் பாகுபாடின்றி, இன்னும் சொல்ல வேண்டும் என்றால், ஆறு மாதத்திற்கு முன்பு எதிர்க்கட்சியைச் சார்ந்த முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் அவர்கள், இந்த திட்டத்தில் நிறைவேற்றி தருவதற்கான பணிகள் குறித்த பட்டியல் எதுவும் தரவில்லை. மீண்டும் மீண்டும் கேட்டு அதற்குப்பிறகு தான் அவர் தந்தார்.

சாத்தியமில்லாத திட்டம் வரும்போது நிறைவேற்ற சாத்தியமில்லை என்ற பதில் வருகிறது. எனவே நிதிக்கு உட்பட்டு, சாத்தியப்படக்கூடிய திட்டங்கள் தான் நிறைவேற்ற முடியும். அந்தப் பணிகளை நிறைவேற்றி கொண்டிருக்கிறோம்.

பள்ளிக்கூடத்திற்கான கட்டடங்கள் பற்றி எதிர்க்கட்சி தலைவர் சொன்னார். இது அந்த துறையின் சார்பில் நிறைவேற்றப்படுகிறது. எனவே, எந்த கட்சி பாகுபாடின்றி இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது என்பதை மீண்டும் இந்த அவையில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

### 'அச்சுறுத்தப்படும் இந்திய கல்விமுறை' குறித்த – திருமதி சோனியா காந்தியின் விமர்சன கட்டுரை –

# தேசிய கல்விக் கொள்கையில் தமிழ்நாட்டின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகிறது!

## பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கருத்து!

*சென்னை, ஏப். 2 -*

*பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசின் கல்விக் கொள்கையை நாடாளுமன்ற காங்கிரஸ் குழுத் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள், கடுமையாக விமர்சித்து 'தி இந்து' ஆங்கில நாளேட்டில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார்.*

*இதனை வரவேற்று, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*



*காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்கள் 'தி இந்து' ஆங்கில நாளேட்டில் எழுதியுள்ள கட்டுரையானது தேசிய கல்விக் கொள்கை, 2020 இன் மையப் பிரச்சினைகளாக மூன்று 'C'க்கள் - அதிகாரக்குவிப்பு (centralisation), கல்வி வியாபாரமாக்கப் படுதல் (commercialisation) மற்றும் கல்வியில் மதவாதம் புகுத்தப்படுதல் (communalisation) ஆகியவை இந்தியக் கல்வி அமைப்பினை அச்சுறுத்துவதை மிக ஆற்றலோடு விளக்குகிறது.*

*தேசிய கல்விக் கொள்கையானது சமச்சீரான, அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை வழங்குவதில் தமிழ்நாடு அடைந்துள்ள மிகச்சிறப்பான வளர்ச்சியைத் தடுக்கும் முயற்சி மட்டுமல்ல; மற்ற மாநிலங்கள் இது போன்ற முன்னேற்றத்தை அடையக் கூடாது, சாதியப் படிநிலை பேணப்பட வேண்டும், கூட்டாட்சியியல் கோட்பாடுகளைச் சிதைக்க வேண்டும் என்பதற்காகவும் மேற்கொள்ளப்படும் அப்பட்டமான முயற்சி ஆகும்.*

*அவ்வகையில், திருமதி. சோனியா காந்தி அவர்களின் இந்தக் கட்டுரை தேசிய கல்விக் கொள்கையை எதிர்க்கும் தமிழ்நாட்டின் கொள்கைப்பூர்வ நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகிறது.*

*ஆர்.எஸ்.எஸ். செயல் திட்டத்தோடு சமூகநீதி, மாநில சுயாட்சி, கல்வி பற்றிய அரசியலமைப்புச் சட்டத்தின் பார்வை ஆகியவற்றுக்கு அச்சுறுதலாக விளங் கும் இந்தக் கொள்கையை உறுதியோடு எதிர்க்கும் நமது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகிறது.*

*இந்தியக் கல்வித் துறையின் எதிர்காலம் பற்றி கவலைப்படும் அத்தனை பேரும் படித்தாக வேண்டிய கட்டுரை இது.*

*இவ்வாறு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.*



விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி ஒன்றியத்தில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார். அதன் ஒரு பகுதியாக பல்லவரேந்தல் மற்றும் ஆவியூர் ஆகிய ஊராட்சிகளில் தலா ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட அயோத்திதாச பண்டிதர் பெயரால் அமைந்த சமுதாயக் கூடங்களை திறந்து வைத்தார்.